# புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணினி பயன்பாட்டியல் துறையில் கல்லூரிகளுக்கு இடையேயான ஒரு நாள் அறிவு பகிர்வு நிகழ்ச்சி




புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணினி பயன்பாட்டியல் துறை சார்பாக 13.02.2026 அன்று “கெய்ட் – 2026” என்ற கல்லூரிகளுக்கு இடையேயான ஒரு நாள் அறிவு பகிர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருச்சி, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 10 கல்லூரிகளில் இருந்து கணினி, இயற்பியல், வேதியல், கணிதவியல் துறையைச் சார்ந்த 90 க்கும் மேலான மாணாக்கர்கள் கலந்து கொண்டனர்.

கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் முனைவர் கவிதா சுப்பிரமணியன் தலைமை உரையாற்ற கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜ.பரசுராமன் வரவேற்புரை வழங்கினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணாக்கர்களுக்கு நான்கு விதமான போட்டிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களை பிடித்த கல்லூரிகளுக்கு இடத்திற்கேற்ப புள்ளிகள் வழங்கப்பட்டது போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு

சான்றிதழோடு ரொக்க பரிசும் வழங்கப்பட்டது.

வினாடி வினா போட்டியில் முதல் பரிசு ஆலங்குடி அரசு கல்லூரியைச் சார்ந்த ஜெ. ஹரிணி, ஐ. டெல்பி இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசாக திருமயம் அரசு கலைக் கல்லூரியை சார்ந்த வி.மோகன்ராஜ், எஸ். பிரேம்குமார், டி. தெரசா ஏன்ஜெல் மற்றும் டி. அட்சயா, அறிவு சார்ந்த போட்டிகளில் ஸ்ரீவாஞ்சி கல்லூரியை சார்ந்த மாணாக்கர்கள் அட்சயா மற்றும் தர்ஷினி ஆகியோர் முதல் பரிசு செய்யும் இரண்டாம் பரிசாக திருமயம் அரசு கலைக் கல்லூரியை சார்ந்த கவிநிலா மற்றும் சுபாலக்ஷ்மி ஆகியோரும் மூன்றாம் பரிசாக அறந்தாங்கி அரசு கலைக் கல்லூரியைச் சார்ந்த சிவானந்தன் மற்றும் ஸ்ரீதர் . வேடிக்கைக்காக மட்டுமே என்ற போட்டியில் திருமயம் அரசு கலைக் கல்லூரியைச் சார்ந்த காவியா மற்றும் அழகுமீனாள் முதல் பரிசையும் இரண்டாவதாக புதுக்கோட்டை மதர் தெரசா கல்லூரியைச் சார்ந்த பத்மநாதன் மற்றும் மாயழகர் மூன்றாம் பரிசாக ஆலங்குடி அரசு கலைக் கல்லூரியைச் சார்ந்த ஜெ. ஹரிணி, ஐ. டெல்பிஆகியோரும் வெற்றி பெற்றனர். ஆச்சரிய நிகழ்வு என்று போற்றில் முதல் பரிசாக திருமயம் அரசு கலைக்கல்லூரி அருள்மணி மற்றும் ஆரோக்கியதிவ்யா இரண்டாவதாக அறந்தாங்கி அரசு கலைக் கல்லூரியைச் சார்ந்த சிவானந்தன் மற்றும் ஸ்ரீதர் ஆகியோரும் மூன்றாவதாக ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரியைச் சார்ந்த அழகார்ஸ்வாமி மற்றும் வைத்தீஸ்வரன் ஆகியோரும் வெற்றி பெற்றனர்.

இதனையடுத்து அனைத்துப் போட்டிகளிலும் கூடுதல் புள்ளி பெற்ற திருமயம் அரசு கலைக் கல்லூரி மாணாக்கர்கள் சாம்பியன் கோப்பையை தட்டி சென்றனர்.

இறுதியாக முதல்வர் சான்றிதழ்களையும் பரிசுத்தொகை வழங்கி கணினி பயன்பாட்டில் துறையின் தலைவர் முனைவர் சதீஷ் ஆரோன் ஜோசப் விழாவின் இறுதியில் நன்றியுரை வழங்க துறையின் பேராசிரியர்கள் மற்றும் துறையின் மூன்றாம் ஆண்டு தன்னார்வல மாணாக்கர்கள் (கவியரசன், ஹரிஹரன், ஹர்ஷன்கர், காளிதாஸ் ராஜ்குமார், கீரித்திவாசான், ஜெகநாதன், ரஜிஸ்கான், சந்தோஷ், நவுநாத், பவித்ரன்,அன்சாரி, நாகஅர்ஜுன் இரண்டாம் ஆண்டு ஜூவாய்ன், ரகு,ராமகிருஷ்ணன், கபிலன், சந்தோஷ்) துணையோடு பேராசிரியர் திருமதி. ம. சாருலதா ஒருங்கிணைக்க, துறைப் பேராசிரியர்க்கள் இணைந்து இந்நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்து சிறப்பித்தனர்.